தெரிகிறது. ஏரியின் நீர் மட்டம் 1.98 மீட்டரிலிருந்து தூர்ந்துப்போய் இப்போது கிட்டத்தட்ட ஒரு மீட்டர் அளவிற்குத்தான் உள்ளது. ஆகவே, பறவைகளுக்காகவும், அதைவிட முக்கியமாக எங்கள் பகுதி விவசாயிகளுக்காகவும், அந்த ஏரியை உடனடியாகத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி அனைத்துவித அனுமதிகளையும் விரைந்துப் பெற்றுத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் உள்ள ஏரியை சீர்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2012—2013 ஆம் நிதி ஆண்டில் ரூ.10.26 இலட்சம் நிதியை ஒதுக்கி, அந்த ஏரியைத் தூர் வாரும் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**7—**

## சிறுபாலம்

***5997—திரு. இரா. மணிமாறன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூந்தமல்லி தொகுதி, தாமரைப்பாக்கம், வெங்கல், அமணம்பாக்கம் கூட்டுச் சாலையில் (செங்குன்றம்—திருவள்ளூர் சாலை) சிறுபாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

2013 *பிப்ரவரி* 5]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*தாமரைப்பாக்கம், வெங்கல், அமணம்பாக்கம் கூட்டுச் சாலையில் கிலோ மீட்டர் 60/4 என்ற இடத்தில் ஒரு வரிசை கொண்ட குழாய்ப் பாலம் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டு, மழைக் காலங்களில் இக்குழாய்ப் பாலம் வழியாகத் தண்ணீர் சீராகச் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன் அவர்கள்.*

**திரு. இரா. மணிமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 'செயின்ட் ஜார்ஜ் கோட்டை; நாளை செங்கோட்டை' என, மகத்தில் பிறந்து ஜகத்தை ஆள வந்த எங்கள் தாயே, தங்கள் திருவடியில் என் கோடானு கோடி வணக்கத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

**திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதியில் கும்பகோணம் நகரின் மையப் பகுதியில் உள்ள காவிரிப் பாலம் 140 ஆண்டுகள் பழமையான பாலம். அந்தப் பாலம் பழுதடைந்து ஒரு வருட காலமாகப் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. நகரின் விஸ்தரிப்பு காரணமாக பொது மக்கள் பிரதான சாலையை அடைவதற்கு சுமார் 4 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டியுள்ளதால், பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, அதன் அவசியத்தைக் கருதி, அந்தப் பாலத்தினை இந்த ஆண்டிலாவது கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியை ஆய்வு செய்து, வருகின்ற காலத்தில் அந்தப் பாலப் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு)*

*வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**8—**

**அணைக்கட்டு**

**18880*—**திருமதி ர. சுபா:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கெங்கவல்லி தொகுதி, வீரகனூர் பேரூராட்சியிலுள்ள பொன்னாளியம்மன் அணைக்கட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, வீரகனூர் பேரூராட்சியில் உள்ள பொன்னாளியம்மன் கோயில் அருகே ஏரி அமைக்கும் திட்டம் உள்ளதா என்று இங்கே கேள்வி எழுப்பியுள்ளார்கள். இந்தத் திட்டம், இந்தத் துறையினுடைய ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தின்மூலம் அப்பகுதியிலே 441 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். துறையினுடைய விரிவான ஆய்வுக்குப்*